# அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத - பிரிவு 2 சேவைத் தொகுதியின் தட்டெழுத்தாளர் பதவியின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - தரம் III

அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் சாராத - பிரிவு 2 சேவை தொகுதியில் தட்டெழுத்தாளர் பதவியில் பதினான்கு (14) வெற்றிடங்களுக்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்திசெய்யும் இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. ஆட்சேர்ப்பு :

2.1 கல்வித் தகைமைகள்:

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், ஆகக் குறைந்ததாக ஒரு (01) பாடத்திலேனும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.2 தொழில்சார் தகைமைகள் :

தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபை, தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சில் பதிவுசெய்துள்ள ஏனைய பயிற்சி நிறுவனங்களில் தட்டெழுத்து தொடர்பான கற்கைநெறி அல்லது செயலாளர் அனுபவம் தொடர்பான கற்கைநெறியை கற்றுத்தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2.3 உடற்றகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பத்தாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான அளவில் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

2.4 ஏனைய தகைமைகள் :

(I) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(II) விண்ணப்பத்தாரர் சிறந்த ஒழுக்கத்துடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.

(III) பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான எல்லா தகைமைகளும், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. வயது :

(I) ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(II) ஆகக் கூடிய வயதெல்லை : 30 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. சம்பள அளவுத் திட்டம் :

(I) சம்பள குறியீட்டு இலக்கம் : MN-1-2025

(II) சம்பள அளவுத் திட்டம்: ரூ. 45230 - 10x540 – 11x630 – 10x890 – 10x1190 - 78360

05. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :

(I) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தால் இனிவருங் காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கையுடனான தீர்மானங்களுக்கு நீங்கள் கீழ் படிதல் வேண்டும்.)

(II) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தில் பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(III) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பத்தாரிகள் 03 ஆண்டுகால தகுதிகூர்நிலை காலத்திற்கு உட்படுவார்கள்

06. ஆட்சேர்ப்பு முறை :

தொழில்சார் பரீட்சை மற்றும் தகவுத்திறன் மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை நடாத்துவதன் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

06.01 தொழில்சார் பரீட்சை

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு | சித்தியடையும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| சிங்களம்/ஆங்கிலம் தட்டச்சு செய்தல் (குறைந்த வேகம் ஒரு நிமிடத்திற்கு 20 சொற்கள் படி 20 நிமிடங்களுக்குள் தட்டச்சு செய்தல்.) | 100 | 40 |

06.02 தகவுத் திறனை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை

புள்ளிகள் வழங்கும் முறை :

| புள்ளிகள் வழங்கும் பிரதான தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|
| 1. மேலதிக கல்வி தகைமைகள்<br><br>க.பொ.த. (சா/த) பரீட்சையில், அடிப்படை தகைமைகளை கவனத்தில் கொண்டு பார்க்கப்படும் பாடங்களைத் தவிர்ந்த எஞ்சிய 02 பாடங்களின் பொருட்டு,<br>• A சித்தி - 05 புள்ளிகள்<br>• B சித்தி - 03 புள்ளிகள்<br>• C சித்தி - 02 புள்ளிகள்<br><br>க.பொ.த.(உ/த)பரீட்சையில், அடிப்படை தகைமைகளாக கவனத்திற் கொள்ளப்படுகின்ற பாடம் தவிர்ந்த எஞ்சிய 02 பாடங்களின் | 20 |

| | |
|---|---|
| பொருட்டு,<br>• A சித்தி - 05 புள்ளிகள்<br>• B சித்தி - 04 புள்ளிகள்<br>• C சித்தி - 03 புள்ளிகள்<br>• S சித்தி - 02 புள்ளிகள் | |
| 2. துறைக்கு ஏற்புடையதாக மேலதிக தொழில்சார் தகைமைகள்<br><br>தனியார் / அரச நிறுவனமொன்றில் 06 மாதங்களிலான தட்டெழுத்து அல்லது கணினிப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>• 06 மாதங்களுக்காக - 10 புள்ளிகள்<br>• 12 மாதங்களுக்காக - 20 புள்ளிகள் | 20 |
| 3. **அனுபவம்**<br><br>அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்திற்கு இணைந்துள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தட்டெழுத்தாளர் பதவியில் / தனிப்பட்ட உதவியாளர் பதவியில் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.<br>• 01 ஆண்டுக்காக - 05 புள்ளிகள்<br>• 02 ஆண்டுகளுக்காக - 10 புள்ளிகள்<br>• 03 ஆண்டுகளுக்காக - 15 புள்ளிகள் | 15 |
| 4. ஆங்கில மொழி தொடர்பான அறிவு<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கற்கைநெறி கற்று பெற்றுக்கொள்ளப்பட்ட, ஆங்கில மொழித் தேர்ச்சிச் சான்றிதழ்.<br>• 03 மாதங்களிலான சான்றிதழுக்காக - 05 புள்ளிகள்<br>• 06 மாதங்களிலான சான்றிதழுக்காக - 10 புள்ளிகள்<br>• 01 ஆண்டுக்குரிய | 20 |

| | |
|---|---|
| சான்றிதழுக்காக - 20 புள்ளிகள் | |
| 5. கணினி அறிவு<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கற்கைநெறி கற்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி அறிவு தொடர்பான தேர்ச்சிச் சான்றிதழ்<br>• 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த சான்றிதழ் பொருட்டு - 05 புள்ளிகள்<br>• 06 மாதங்களிலான சான்றிதழ் பொருட்டு - 10 புள்ளிகள்<br>• 01 ஆண்டு சான்றிதழ் பொருட்டு - 20 புள்ளிகள் | 20 |
| **6. நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் தொடர்பாடல் ஆற்றல்** | 05 |

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026 ...................... மாதம் ............... ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர், இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் " **தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பபடிவம்**" என்று குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

08. தகவுத்திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போதே விண்ணப்பத்தாரிகளின் அடிப்படைத் தகைமைகள் பரிசோதனை செய்யப்டும்.

09. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கபடும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையானது, அரசாங்க பகுப்பாய்வாளரால் தீர்மானிக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுதலானது நிரந்தர நியமனத்திற்கான தகுதியல்ல என்பதை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

10. தகவுத் திறன் மதிப்படல் நேர்முகப் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் ஆற்றல் ஒழுங்குமுறை மற்றும் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் அரசாங்கப் பகுப்பாய்வாளரால் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

11. இந்த வெற்றிடங்களை பூர்த்திசெய்தல் தொடர்பிலான இறுதித்தீர்மானம் அரசாங்கத்தின் பகுப்பாய்வாளரை சார்ந்திருக்கும்.

எம்.ஏ.கே.கே.பி. பெரேரா

அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் ("மூடிமறைக்கும் வேலை)

திகதி - ....................

**<u>அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின்</u>**

**<u>முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் சாராத – பிரிவு 2</u>**

**சேவைத் தொகுதியின் தட்டெழுத்தாளர் தரம் III இன் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்.**

**மாதிரிப் படிவம்**

01. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) - ......................................................................

(ஆங்கிலம்) - ......................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழ்) - ..................................................

(ஆங்கிலம்) - ......................................................................

03. பிறந்த திகதி - ஆண்டு .............. மாதம்..............திகதி........

வயது............................ஆம் திகதியில் - ......................................................................

04.பால்-பெண்/ஆண் - ......................................................................

05.விவாகமானவர் / விவாகமாகாதவர் - ......................................................................

06. தொலைபேசி இலக்கம் - ......................................................................

07. மின் அஞ்சல் முகவரி - ......................................................................

08. தேசிய அடையாள அட்டை இலக்கம்- ..............................................................

09. நிரந்தர முகவரி - ......................................................................

10. கல்வித் தகைமைகள் - ......................................................................

11. தொழில்சார் தகைமைகள் - ......................................................................

12. ஏனைய தகைமைகள் - ......................................................................

மேற் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானது எனவும், சரியானது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி - ..........................                                        ........................................

விண்ணப்பத்தாரியின்

கையொப்பம்